1975 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒரேமாதிரியான வேலைகளைச் செய்வதில்லை. உற்பத்தி, அனுப்புதல், விநியோகம் (Production, transmission and distribution) ஆகிய இந்த மூன்று பணிகளையும் மின்சார வாரியத்தில் இருக்கிறவர்கள் செய்கிறார்கள். இவ்வேலைகள் நகரசபையில் வேலை செய்கிறவர்களுக்கு இல்லை என்று—நாம் அல்ல—ஹைக்கோர்ட்டே தீர்ப்பு அளித்திருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது வேறுபல துறைகளில் ஒரே மாதிரியான பணிகளைச் செய்கின்றவர்கள் எங்கு பணியாற்றினாலும் ஒரேமாதிரியான சம்பளம், இதர சலுகைகளைப்பெற வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் மின்சார வாரியத்தில் பணிபுரிகின்றவர்களைப்போலவே இந்த நகரசபைகளில் பணிபுரிகின்றவர்களும் செய்கிற காரணத்தினால் ஒரேமாதிரியான சம்பள, சலுகைகளை அளிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கம் வேறு. நகராட்சி மன்றங்கள் வேறு. சம்பள விகிதத்தில் இவர்களுக்குள் எந்தவிதமான மாற்றமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் மின்சார வாரியத்தில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல இங்கே உள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று அவர்கள் தீர்மானம் போட்டும் கூட. இதே சம்பள விகிதம் தான் அங்கே உள்ளவர்களுக்கும் தரப்படுகிறது.

ஆனால் அவர்கள் அங்குள்ள நிலை ஆணைகள், ஓய்வு பெறுகின்ற வயது—அங்குள்ளவர்களுக்கு 58 ஆக இருப்பதுபோல தங்களுக்கும் வேண்டுமென்று கேட்கிறார்கள். இவர்கள் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்டின் கீழ் வருகிறார்கள். ஆகவே, இந்த இரண்டையும் அரசு நிராகரித்துவிட்டது. கிராஜுவிட்டி, ஓய்வூதியம் பற்றி கேட்கப்பட்டுள்ளது பற்றி அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. முனு ஆதி : நகராட்சியில் பணியாற்றி வந்தால் என்ன, மின்சார வாரியத்தில் பணியாற்றி வந்தால் என்ன ? இங்குள்ளவர்கள் கம்பம் ஏறுவதைப்போலத்தான் அங்குள்ளவர்களும் கம்பம் ஏறுகிறார்கள். அவர்களுக்கும் ஷாக் அடிக்கிறது. ஆகவே இரண்டு இடத்திலும் உள்ளவர்களுக்கு ஒரேமாதிரியான சம்பள, இதர சலுகைகளை அளிக்க அரசு முன்வருமா ?

[1975 அக்டோபர் 31

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அங்குள்ளவர்கள் வெறும் கம்பம் ஏறுகிறார்கள். மின்சார வாரியத்தில் பணி யாற்றுகிறவர்கள் Alternators, generators and Transformer Towers ஏறவேண்டியிருக்கிறது.

குடந்தை அறநிலையத்துறை அலுவலகம்.

* 162 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தற்போது குடந்தையிலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகத்தினை மாயூரத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னால் கிழக்குத் தஞ்சை, மேற்குத் தஞ்சை என்று பிரித்து, இரண்டு உதவி ஆணையர்களைப்போட்டு கவனித்து வந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகக் கோவில்கள் இருக்கின்றன என்று இப் போது அந்த மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து மூன்று உதவி ஆணையர்களைப் போட்டிருக்கிறார்கள். இதில் கும்பகோணம், மாயூரம், சீர்காழி ஆகிய மூன்றை—ஒரு பிரிவாக்கி—ஒரு உதவி ஆணையரைப் போட்டிருக்கிறார்கள். இப்போது இவருடைய தலைமையிடம் கும்பகோணமாக இருக்கிறது. கும்பகோணம், மாயூரம், சீர்காழி ஆகிய மூன்றுக்கும் மாயூரம் மையமாக இருப்பதால், மாயூரத்தில் இந்த உதவி ஆணையரின் அலுவலகத்தை அமைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டத்தில் 19 பட்டியலைச் சேர்ந்த அறநிலையங் களும், 471 பட்டியலில் சேராத அறநிலையங்களும், நான்கு மடங் களும் உள்ளன. மாயூரத்தில் 33 பட்டியலில் சேர்ந்த கோவில் களும், 394 பட்டியலில் சேராத அறநிலையங்களும் உள்ளன. சீர்காழியில் 9 பட்டியலில் சேர்ந்த கோவில்களும், 103 பட்டியலில் சேராத கோவில்களும் உள்ளன. ஆகவே கும்பகோணம், மாயூரம், சீர்காழி என்று பார்க்கிறபோது, கும்பகோணம் பகுதியில் அதிக மான அறநிலையங்கள் இருக்கிற காரணத்தினால் அறநிலையத்துறை

1975 அக்டோபர் 31]

உதவியாணையரின் தலைமையிடமாக கும்பகோணம் வைக்கப்பட்டிருக்கிறது. அதோடு அறநிலையத் துறைக்குச் சொந்தமாக கட்டிடம் அங்கே இருக்கிற காரணத்தினலும் வைத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

Production of Neem Oil. ...

* 164 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of Government to set up an Industry for the production of Neem Oil in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

Training for Harijan cultivators.

* 164. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether any special provision has been made for imparting training to Harijan cultivators in Dry Farming in the Dry Farming Research Station at Kovilpatti, Tirunelveli district; and

(*b*) if so, the expenditure incurred in this regard for this year?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

(இ) பருவமழை பொய்த்ததன் காரணமாக தொகை எதுவும் செலவிடப்படவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: அரிசனங்களுக்கு எந்தவிதமான திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில்பட்டியில், புஞ்சை நிலத்தில் அரிசனங்களுக்கு இந்தப் பயிற்சியை அளிப்பது என்று 73-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1974-ஆம் ஆண்டில் நான்கு பகுதிகளில் இருந்து 40 அரிசன விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து இந்தத்

திட்டத்தைச் செயல்படுத்த இருந்தோம். பருவமழை பொய்த்து விட்டது. தண்ணீர் இல்லை. ஆகவே போன ஆண்டு அது கைவிடப்பட்டு, இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் அந்தப் பயிற்சித் திட்டத்தை துவக்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : எத்தனை அரிசனங்களுக்கு, எத்தனை மாதங்களுக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும்? அது திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் தானா? அதில் சேர இதர மாவட்டத்து அரிசன விவசாயிகள் விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இது பரிட்சார்த்தமாக முதன் முதலாக திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டியில் நடத்த இருக்கிறோம். இது நல்ல பயன் அளித்தால் இதனையே மற்ற பகுதிகளுக்கும், இதனை நாடுதழுவிய திட்டமாக அமைக்க லாம் என்பது அரசாங்கத்தின் கருத்து. இந்தப் பயிற்சி 6 வாரத் திற்கு, 40 பேர்களுக்குக் கொடுக்க இருக்கிறோம். ஒருவருக்கு ஒரு நாளைக்கு 6 ரூபாய், சாப்பாடு, போக்குவரத்துச் செலவுக் காகவும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

திரு. எஸ். வடிவேல் : எந்த எந்த வகையில் பயிற்சி அளிக்கப் படுகிறது? மேலத் தஞ்சையில் புஞ்சை நிலம் இருக்கிறது. அங்குள்ள அரிசன விவசாயிகளுக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : கோவில்பட்டியில் நமக்குக் கிடைக்கிற அனுபவத்தைக்கொண்டு, அதன் பலாபலன் களைப் பார்த்து பிற இடங்களுக்கும் விஸ்தரிக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : ஆறு நாளைக்குப் பயிற்சி என்றால் இந்த ஆறு நாளைக்குள் என்ன கொடுக்க முடியும்? புஞ்சை நில சாகுபடி மேம்பாட்டுப் பயிற்சி ஆறு நாளில் நடத்த, என்ன என்ன பயிற்சி கொடுக்க இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : இது ஒரு பரிட்சார்த்தத் திட்டம், இந்த ஆறு நாள் பயிற்சித் திட்டத்தை நடத்திய பிறகு தான் இதில் உள்ள சிரமங்கள் அல்லது பலன்கள் தெரியவரும். அதற்குப்பின் இதைத் தகுந்த முறையில் மாற்றி அமைத்துக்